# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No. 123/2025

Deposition of Witness for L.W.2 / P.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வகுமார் | | | |
| Father's/ Husband's Name | : | ராமசாமி | Occupation | : | ஓட்டுநர் (லாரி) |
| Village | : | அசோகபுரம் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.07.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு அசோகபுரத்தில் வசித்துக் கொண்டு லாரி ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வாழ்க்கை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது. எனது மனைவி வீட்டில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறார். நான்கு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 08.30 மணி அளவில் போலீசார் என்னிடம் வந்து எனது பெயர் மற்றும் முகவரியை கேட்டு எழுதிக் கொண்டார்கள். எதற்காக கேட்கிறீர்கள் என்று போலீசாரிடம் கேட்டபோது, ஏதோ சம்பவம் நடந்ததாகவும், அதுகுறித்து வெரிஃபிகேஷன் செய்வதாகவும் என்னிடம் தெரிவித்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

11.06.2024ம் தேதி இரவு 07.00 மணி சுமாருக்கு மேற்படி ராதிகாவும் ஞானசம்மந்தம் என்பவரும் தங்கள் கடைக்கு அருகில் உள்ள கண்ணன் பெட்ரோல் பங்க் உள்ள நாட்ராயன் கோவில் எதிரில் வந்து கொண்டிருந்த போது

அவர்கள் இருவரையும் பார்த்த ஆட்டோ டிரைவர் சரவணன் என்பவர் அவர் ஓட்டி வந்த TN 43 1076 என்ற பதிவு எண்ணுள்ள ஆட்டோவை அவர்கள் சென்ற பைப் மீது பின் பக்கம் மோதியதாகவும், அதில் ராதிகா மட்டும் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டதாகவும், வலது பெருவிரலில் சிராய்ப்பு காமும் இடது தோள் பட்டையில் மோக்கை காயமும் ஏற்பட்டதாகவும், அப்போது ராதிகா சரவணனை பார்த்து ஏன் இப்படி வந்து பைக் மீது பின் பக்கம் மோதினார் ஆட்டோவை மோதினாய் என்று கேட்டபோது மேற்படி சரவணன் ராதிகாவை ஏண்டி என்னோடு பழக்கம் வைத்துவிட்டு ஞானசம்மந்தத்துடன் எதுக்குடி பழக்கம் வைத்து கொண்டு அவனோடு போறாயாடி தேவடியா கண்டாரோலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி கையால் அடித்ததாகவும், ராதிகா சத்தம் போட நானும் அக்கம் பக்கம் இருந்தவர்களும் பக்கத்தில் சென்று கூட்டம் கூடியதும் அதை பார்த்த சரவணன் ஏண்டி தேவடியா இன்னைக்கு தப்பித்து கொண்டாய் அவனோடு பழக்கம் வைத்து கொண்டால் என்னைக்கு இருந்தாலும் இந்த ஆட்டோவை ஏற்றி ரோட்டிலேயே உன்னை முடித்து விடுவேன் என்று மிரட்டிவிட்டு ஆட்டோவில் ஏறி ஆட்டோவை ஸ்டார்ட் செய்ததாகவும், அங்கு வந்து இருந்தவர்கள் சரவணனை பிடிக்க முயற்சி செய்ததாகவும், அப்போது சரவணன் ஆட்டோவை நிறுத்தி விட்டு ஓடி விட்டதாகவும், பிறகு ஞானசம்மந்தம் என்பவர் 108க்கு போன் செய்ததாகவும், வண்டி வந்ததும் ராதிகாவை 108 மூலம் ஈரோடு GHக்கு அழைத்து சென்றதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமரசமாக செல்ல வேண்டி எதிரிக்கு ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.